

# நமச்சிவாயமாலை

---

தொகுப்பு :

**வைரமுத்து கணேசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனோபாவச் சித்ரம்

: பிரசுரம்

சிவானந்த ஆச்ரமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமச்சிவாய மாலை

அறைமறை யயனுமாலும் அமரரு முனிவர் தாமும்
முறைமுறை வணங்கியேத்தும் முதல்வனே நமச்சிவாய.

ஆதியாய் வேதநான்காய் அடிமுடி தெரியா வண்ணம்
சோதியாய் நிறைவாய் னின்ற துணைவனே நமச்சிவாய.

இறையடி தேடிக்காணா ஏழுலகளந்த மாயன்
கணையதா வெயின் மூன்றெய்தத கடவுளே நமசிவாய.

ஈட்டியபொருள் போலுன்றன் இணையடி பணிவார் துன்பம்
வாட்டிய செம்பொன் மேனி வள்ளலே நமச்சிவாய.

உமையொரு பாகம் வைத்த உம்பர்கள் தம்பிரானே
அமைதரு மணியே முத்தே அண்ணலே நமசிவாய.

ஊனுமா ஞயிருமாகி உள்ளுமாய்ப் புறமுமாகித்
தானுவாய்ச் சகத்துக் கெல்லாம் தந்தையே நமச்சிவாய.

எழு பிறப்பதனான் மாழ்கும் என்னுார்க் கிரங்கிவந்து
பழுதற ஆண்டுகெள்ளும் பரமனே நமச்சிவாய

ஊடவிழ் கோதை மாதர் இளமுலை மயக்கப்பட்டு
நீடுதலொழிக்கவல்ல நிமலனே நமச்சிவாய

ஐயமேற்றுண்டாய் பாதம் அன்பிலேன் றலைமேல் வைத்த
செய்யனே வானோர் போற்றுந்தேவனே நமச்சிவாய.

ஒன்பது வாயிற் கூட்டில் ஒடுங்குயிர்ருய்யும் வண்ணம்
பொன்பொதி மலர்த்தாள் காட்டும் புனிதனே நமச்சிவாய.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓமெனு மெழுத்தினுள்ளே ஒளியதாய் விளங்குகின்ற
வாமனே கருணை நல்கும் வள்ளலே நமச்சிவாய.

ஔவியம் பேசாவண்ணம் அடிமையைத் தடுத்தாட்கொள்ளும்
திவ்விய மணியே முத்தே தேவனே நமச்சிவாய

அக்கினைப் பூண்டு கொண்டே அரிய வெண்ணீறு பூசுஞ்
சொர்க்கனே செக்கர் மேனித் தூயனே நமச்சிவாய.

கம்பமார் களிறுரித்த கச்சியேகம்பா செம்பொன்
அம்பலத் தாடுகின்ற அண்ணலே நமச்சிவாய.

நுகரம்போல் வளைந்துழன்று நாயினேனுணவு தேடும்
பகரொணா இன்னல் தீர்க்கும் பரமனே நமச்சிவாய.

சக்தியுஞ் சிவமுமாகித் தாணுவாய்ச் சகத்துக்கெல்லா
முத்தியே யளிப்பாயாதி முதல்வனே நமச்சிவாய.

ஞமனுடனிந்திரர்க்கும் நாரணற் காரணர்க்குஞ்
சமனுற முதலாய் நின்ற தாணுவே நமச்சிவாய.

இடவிய கபாலமேந்தி ஏழிரண்டுலக மெல்லாந்
துடவியுங்காண வொண்ணாச் சங்கரா நமச்சிவாய

இணங்கிய கமலப் பொற்றாள் இருவருமேத்தி நின்று
தணங்கவம் பலத்துளாடும் வானவா நமச்சிவாய

தண்டமிழ் முனிவன்றன்னைச் சமமுறத் தென் பாலேயும்
அண்டரோ டயன்மால் காணா ஆதியே நமச்சிவாய.

நஞ்சணி கண்டத்தானே நதிமதிச் சடையினானே
கொஞ்சுபச் சிளம் பெண் பாகங் கொண்டவா நமச்சிவாய.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டுல களந்த மாலும் பங்கயத் தயனுந்தேடிக்
கொண்டு சென்றறிய வொண்ணாக் குரவனே நமச்சிவாய.

மங்கையோர் பாகம்வைத்து வளர்பிறை முடிமேல் வைத்துச்
செங்கையின் மழுமான்வைத்த தேவனே நமச்சிவாய

இயக்கரு முனிவர்தாமும் இருகரங்குவித்து நின்று
வியக்கவம்பலத்திலாடும் விமலனே நமச்சிவாய.

அரகர சிவனேயென்றும் அம்பலத்தாடியெனென்றும்
பரவுவார் துயரந்தீர்க்கும் பரமனே நமச்சிவாய.

இலவிதழ் மடவார் தங்கள் ஏவலுக்குரியனாகி
அலமருமென்னையாண்ட அமலனே நமச்சிவாய.

வளமுறு மங்கை தன்னை மற்றிடப் பாகம் வைத்தே
ஒளிமதிக் கீற்றைச் சூடும் ஒருவனே நமச்சிவாய.

அழகிய முருகனுக்கோ ராறுமாமுக முங் கூர்மை
பழகிய வேலுமீந்த பரமனே நமச்சிவாய.

இளமையுமூப்பு மில்லா இறைவனே யெம்பிரானே
வளமையாங் கருணைமோன வள்ளலே நமச்சிவாய.

அறவனே பாதந்தேடி அன்றிரு வோருங் காணா
இறைவனே யென்னைக் காக்கும் ஈசனே நமச்சிவாய.

அனந்தலினின்றாள் போற்றி அருச்சிக்கு மடியார் தங்கள்
இனந்தனி லென்னை வைப்பாய் ஈசனே நமச்சிவாய.

கரியுரியதனைப் போர்த்துக் கபாலமும் கையிலேந்தித்
திரிபுர தகனஞ் செய்த தேவனே நமச்சிவாய.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலனை யுதைத்த காலா காமனை யெரித்த கண்ணா
பாலனைக் கறியதாக்கும் பரமனே நமச்சிவாய.

கிளிமொழி யமுதச் செவ்வாய்க் கௌரியைப் பாகம் வைத்த
ஒளிமதிச் சடையினானே யொருவனே நமச்சிவாய.

கீண்டு வெற் பெடுத்த வீரக் கேடிலா வரக்கன் றன்னை
மாண்டுக விரலா லூன்றும் வள்ளலே நமச்சிவாய.

குழைகுழ லடருங்கண்ணாள் கோதையைப் பிரிந்த போது
பிழைசெயு மதனைக் காய்ந்த பிஞ்ஞகா நமச்சிவாய.

கூவிள மறுகு தும்பை கொன்றைவெள் ளெருக் கூமத்தை
மேவிய சடையினானே வித்தகா நமச்சிவாய

கங்கையைச் சடைமேல் வைத்துக் கௌரியைப் பாகம் வைத்தல்
அங்கணா நீதியோ சொல் ஐயனே நமச்சிவாய

கேசவன் வணங்கிக் கண்ணாங் கேழ்கிளர் கஞ்சங் சூட்ட
ஆசியோ டாழியீந்த அமலனே நமச்சிவாய

கைச்சிலை மேருவாகக் கரியாமல் பகழியாக
உச்சிதப் புவித்தேரேறும் ஒருவனே நமச்சிவாய

கொற்றவன் தனக்கு முன்னே குதிரையிலேறிக் காட்டிப்
பொற்றுகில் கோலாற்கொள்ளும் பூரணா நமச்சிவாய.

கோணமா மலையில் வாழுங் கோதிலா வாதியே நீ
ஆணல்லை பெண்ணுமல்லை அதத்னே நமச்சிவாய.

சந்திரன் விளங்குஞ் சென்னித் தலைவனே தம்பிரானே
இந்திர னிமையோர் போற்றும் இறைவனே நமச்சிவாய.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தணி முலையாள்தன்னைத் தண்புனலெனப் போமாற்றி
ஏந்துசெஞ்சடை யெம்மானே இறைவனே நமச்சிவாய.

சிரமது கையிலேந்திச் சீரிய முனிவர் தங்கள்
விரகினை யழித்த மேரு வில்லியே நமச்சிவாய.

சீதள கமளவாவித் திருநாவலூரரான் றன்னைச்
சாதனங் காட்டிய யாண்ட தாணுவே நமச்சிவாய.

சுதத் வெண்ணீரு பூசிச் சுடலை யில்னடன மாடும்
அதத்னே ஆரூர் வாழும் அண்ணலே நமச்சிவாய.

சூரியன் துயரந் தீர்த்தாய் தோன்றி முப்புரத்தைச் சுட்டாய்
ஆரிய வெள்ளி வெற்பின் அத்தனே நமச்சிவாய.

செஞ்சிலை கையிலேந்திச் சிரித்து முப்புர மெரித்தாய்
தஞ்சமென்றுனையடைந்தேன் தாணுவே நமச்சிவாய.

சேதன வடியாரேடு திருப்பெருந் துறையில் வந்து
வாதவூர்ரசை யாண்ட வரதனே நமச்சிவாய.

சைவனே யைம்புலன்கள் தலையனஞ் சாரா வண்ணங்
கைவர மருளவெண்டும் கடவுளே நமச்சிவாய.

சொரிமலர்க் கொன்றை தும்பை சொல்லிய அறுகு தாளி
விரிமலர்ச் சடையாய் வெற்றி வெற்பனே நமச்சிவாய.

சோலைசூழ் ஆலவாயிற் சோதியே சமணை மாய்க்கப்
பாலறா வாயர்க்காகப் பரிந்தருள் நமச்சிவாய.

தந்தையுந் தாயுமில்லாத் தாணுவா யான் பெண்ணல்லாய்
இந்திரன் அயன்மால் போற்றும் இறைவனே நமச்சிவாய.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாதவிழ் கொன்றை தும்பை சங்கொடு தரையுங் கொண்ட
நாதனே வேதமோது நம்பனே நமச்சிவாய்.

திரிபுர மெரித்த மூர்த்தி தென்னவன் முன்னே முன்னாள்
நரிதனைப் பரியதாக்கும் நம்பனேநமச்சிவாய.

தீதிலா வாதவூரர் செய்கையால் மனமகிழ்ந்த
நாதனே பரனேவானோர் நண்பனே நமச்சிவாய.

துணைவனே யன்பர் தங்கள் துன்புறுத் தருளுமூர்த்தி
பணைமுலை யுமையாள்பங்கா பரமனே நமச்சிவாய.

தூதுசுந் தரற்காச் சென்ற சோலைசூ ழாரூரையா
ஆதியே யரனேவெள்ளி யசலனே நமச்சிவாய.

தென்னவனாகக் கூடல் சேர்ந்து செங்கோல் செலுத்தி
அந்நகர் தன்னையாண்ட அமலனே நமச்சிவாய.

தேடியு மிருவர்காணாத் திருவடி மனத்துள் யாரும்
நாடியே வணங்கநின்ற நம்பனே நமச்சிவாய.

தையலோர் பாகம் வைத்துச் சடையிலே கங்கை வைத்த
ஐயனே யாரூர் வாழும் அண்ணலே நமச்சிவாய.

தொல்லுல கெல்லாம் போற்றுஞ் சோதியே சூல பாணி
வில்லென மேருவாங்கும் வித்தகா நமச்சிவாய.

தோத்திரஞ் செயு மாயற்குச் சுடரொளி யாழியீந்த
அத்தனை யடியரன்பிற் களியனே நமச்சிவாய.

நஞ்சினை யருந்தி மாயன் நான்முகன் முதலோர் நாண
அஞ்செழுத் துருவமான அத்தனே நமச்சிவாய.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாரண னனலோனிந்திரன் நாடிமுன் வணங்கின்ற
ஆரண மோதுகின்ற ஆதியே நமச்சிவாய.

நிற்பவர் நெறியை நோக்கி நெஞ்சை விட்டகலா தானே
கற்பனை கடந்தசோதிக் கடவுளே நமச்சிவாய

நீறணி மேனியானே நிமலனே யமரர்கோவே
ஆறணி சடையினானேஅண்ணலே நமச்சிவாய.

நுண்ணிடை மாதுபாகா நோக்குவார் தம்மை நோக்குங்
கண்ணுதற் பரனேதேவா கடவுளே நமச்சிவாய.

நூபுர பத மாதோடு நுவலருஞ் சபையிலாடும்
மாபுரத் தவர்கள்காலா வானவா நமச்சிவாய.

நெஞ்சக மலரிலுன்னை நினைவற நினைத்த பேருக்
அஞ்சலென் றருளிச் செய்யும் அண்ணலே நமச்சிவாய.

நேத்திரந் தன்னால் வேளை நெருப்பெழச் சுட்டுவிட்டாய்
சாத்திர முனிவர்போற்றுந் தாணுவே நமச்சிவாய

நைந்துனை நினைப்பார்பாவம் நாசம தாக்கி நிற்பாய்
பைந்கொடி பாகங்கொண்ட பரமனே நமச்சிவாய.

நொந்தவ ரிளைத்தோர் தம்மை நொடியள வினில் வாழ்விக்கும்
கந்தராங் கறுத்தமூர்த்தி கடவுளே நமச்சிவாய.

நோக்கமுன் றுடையாயென்னை நோக்கியே துரியாதீதத்
தூக்கத்தில் வைப்பதென்றோ சொல்லுவை நமச்சிவாய.

நவ்விலைய யேந்துங்கையாய் நயமுடனடியார் தங்கள்
வெவ்வினை யெல்லாந் தீர்க்கும் விமலனே நமச்சிவாய.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தராய்ப் பணிவார் தம்மைப் பதங்கொடுத் தாளுமையா
சுத்தனே வேதஞ் சொன்ன துணைவனே நமச்சிவாய.

பாடுவோர் மூவர் தம்மைப் பதங்கொடுத்தாண்ட மூர்த்தி
தேடுவோர் தேடுகின்ற செம்பொனே நமச்சிவாய.

பிறையணி சடையினானே பிஞ்ஞகா அடியார்க் கெல்லாங்
குறைவற வாழ்வளிக்குங் கொற்றவா நமச்சிவாய.

பீடுறப் பூசிப்பார்தம் பெருவினை யறுக்குமூர்த்தி
ஆடல் சேரெருதி லேறும் அண்ணலே நமச்சிவாய.

புகலுறுங் கல்லாலன்பு பூண்டெறி சாக்கியர்க்குத்
தகவுற முத்திநல்குந் தாணுவே நமச்சிவாய.

பூசு வெண்ணீறு பொங்கப் பொருவிலா வம்மை காண
நேசமோ டாலங்காட்டில் நிருக்கஞ்செய் நமச்சிவாய.

பெண்ணமு தனையார் நாணும் பெட்புறு வளையுந் தூசும்
எண்ணுறு பலியாக் கொண்ட இறைவனே நமச்சிவாய.

பேயுடன் காட்டிலாடும் பிஞ்ஞகா பெரியோர் தங்கள்
தூய நன்மனத்துளானே சுத்தனே நமச்சிவாய.

பையர வணையிற்றங்கும் பாளந் தோர்க்குப் பாதி
மெய்யளித் தருள் கூர்ந்திட்ட விண்ணவா நமச்சிவாய.

பொசியுறு தேம்புஞ் சோலைப் புகலியிற் பிள்ளை யார்க்குச்
சசியொளி முத்தின் பந்தல் தந்தவா நமச்சிவாய.

போதக மாகிவந்த புன்மைசே ரசுரன் றன்னை
நோதக வித்துப் போர்த்த நுண்ணியா நமச்சிவாய.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌவத்திற் சிலையோடாழும் படியமண் செய்யவப் பர்க்
கெவ்வம தகற்றியப்பேற் றீந்தவா நமச்சிவாய.

மறுவறு மாதிசைவ மரபிற் சுந்தரற்குத் தூதாய்ச்
செறிநிசி பரவை வாயிற் சென்றவா நமச்சிவாய.

மான் மழு கையிலேந்தி வன்னியோர் பாகம் வைத்தே
ஆன்முது கேறுஞ்சோதி ஐயனே நமச்சிவாய.

மிடற்றினிற் ஆலகால விடத்தினைக் கறுக்க வைத்தாய்
நதித்தலை யிருப்ப வைத்தாய். நம்பனே நமச்சிவாய.

மீனென வந்த மாயன் விழியினையிடந்து சாத்தி
ஆனதோர் மேனிநல்கும் அண்ணலே நமச்சிவாய.

முன்னமே பிரமன்றன்னை முனிந்ததோர் தலையறுத் தாய்
என்னை வந்தாண்டு கொள்வாய் ஈசனே நமச்சிவாய.

மூர்க்கனாந் தக்கன் வேள்வி முன்பு சென்றழித்து வெள்ளி
மார்க்கங் கண்டிட்ட சோதி வானவா நமச்சிவாய.

மெலிவிலாத் தவத்தோர் கோப மேலுற முன்னாள் விட்ட
புலிதனை யுரித்துச் சாத்தும் புண்ணியா நமச்சிவாய.

மேயபேருணர்விற் கெட்டா வெளியாகி யணுவுமாகி
ஆயசிற் சொரூபமான அண்ணலே நமச்சிவாய.

மையுறு குழலாள் கூடன் மங்கையர்க் கரசியார்முன்
செய்யு நற்பணிக்கு வந்த தேவனே நமச்சிவாய.

மொழிதரு நால்வர் தங்கள் முதுமறைத் தமிழ்ப் பாமாலை
ஒழிவின்றிச் சூடிக்கொள்ளும் ஒருவனே நமச்சிவாய.

மோகினி வடிவங் கொண்ட முகில்வண்ணன் தன்னைச்சேர்ந்து
சோகமிலையனாரைத் தோற்றியோய் நமச்சிவாய.

மௌவலங் குழலார்மோக வலையறுத்துயர் சித்தாந்தச்
செவ்வையா முத்தியென்று சித்திக்கும் நமச்சிவாய.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Brilliant Printers - Kalmunai.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org